## தி.மு.கழகம் இளமையோடும் வலிமையோடும் இருக்கக் காரணம்

# கலைஞரின் உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான்!

## திண்டுக்கல்லில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**திண்டுக்கல், அக். 11 -**

**திண்டுக்கல்லில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது, ``2026இல் கழகம் பெறவிருக்கும் வெற்றி எட்டுத்திக்கும் எதிரொலிக்கும் வகையில், களப்பணியாற்ற வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.**

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் உங்கள் அத்தனை பேரையும் பலமுறை தனித்தனியாக நேரடியாக சந்தித்திருந்தாலும், இன்று அனைவரையும் ஒரே இடத்தில் சந்திப்பதில் மிகுந்த பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

### பரிசளிப்பு விழா

சென்னையிலிருந்து விமானத்தின் மூலம் திருச்சி வந்து, அங்குள்ள கழக நிர்வாகிகளைச் சந்தித்துவிட்டு, திண்டுக்கல் வந்து திண்டுக்கல்லில் அரசு ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, நானும் நம் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, சக்கரபாணி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, அதன்பிறகு முதலமைச்சர் கோப்பைப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு இப்போது இங்கு வந்துள்ளேன்.

அந்த நிகழ்ச்சியில் என்ன சிறப்பு என்றால், `இந்தியாவின் ஒலிம்பிக்ஸ் கேம்ஸ்' என்று சொல்லும் அளவுக்கு 100 கோடி ரூபாய் பட்ஜெட்டில் நடத்தப்படுகிறது. அதன் பரிசுத்தொகை மட்டும் 38 கோடி ரூபாய். மூன்று வருடங்களுக்கு முன்பு முதலமைச்சர் கோப்பைப் போட்டியில் 3 லட்சம் பேர் கலந்துகொண்டார்கள், இந்த வருடத்தில் தமிழ்நாடு முழுவதும் 16 லட்சம் விளையாட்டு வீரர்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற உள்ளார்கள்.

இதில் கூடுதல் சிறப்பு என்னவென்றால், நானும், அண்ணன் பெரியசாமி, அண்ணன் சக்கரபாணி அவர்களும் பி.எஸ்.என்.ஏ கல்லூரிக்குச் சென்று பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டோம். இன்று பால் மேட்மிண்டன் போட்டியில் தமிழ்நாட்டிலேயே, மாநில அளவில் முதலிடத்தை, திண்டுக்கல் மாவட்டம் முதன்முறையாக வென்று இருக்கிறது. எப்படி முதலமைச்சர் கோப்பையில் வரலாற்றிலேயே முதன் முறையாக கோப்பையை வென்று இருக்கிறதோ, அதேபோல் 2026 சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்கின்ற போட்டியிலும் திண்டுக்கல் மாவட்டம் நிச்சயம் வெற்றிபெறும். அந்தநிகழ்ச்சியைமுடித்துவிட்டு, இன்றைக்குக் கடைசிநிகழ்ச்சியாக உங்களை எல்லாம் சந்திக்க வருகை தந்துள்ளேன்.

### உடன் பிறப்பே வா

ஒருபக்கம் தலைவர் அவர்கள் `உடன் பிறப்பே வா' என்று சென்னையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதியிலும் உள்ள முக்கிய நிர்வாகிகளை அழைத்துத் தனியாக ஒவ்வொரு தொகுதிக்கும் 2 மணி நேரம் செலவிடுகிறார். அந்தத் தொகுதி நிர்வாகிகளை வரவழைத்து என்ன பிரச்சினை, நிர்வாகிகள் எப்படிச் செயல்படுகிறார்கள், அணிகள் எப்படிச் செயல்படுகின்றன என்று நிகழ்ச்சி நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

தலைவர் அவர்கள் எனக்கு கட்டளையிட்டுள்ளார்கள். ``நான் சென்னையில் சந்திக்கிறேன். நீ தமிழ்நாடு முழுவதும் சென்று, ஒவ்வொரு தொகுதிக்கும் நேரம் ஒதுக்கி, அங்கு உள்ள அத்தனை நிர்வாகிகளையும் சந்தித்து வா" என்று என்னை அனுப்பி வைத்துள்ளார்கள். இன்று காலை திருச்சியில் ஒரு தொகுதி நிர்வாகிகளையும், மாலையில் உங்களையும் சந்திக்க வந்துள்ளேன். இது எனக்கு 8வது தொகுதி. இதுவரை 7 தொகுதிகளில் மக்களைச் சந்தித்து பார்த்தவரைக்கும், நாம் வெற்றிப்பெற போவது உறுதி.

நீங்கள் அனைவரும் ஆசையாக என்னைப் பார்க்க வந்துள்ளீர்கள். நீங்கள் எப்படி என்னைப் பார்க்க ஆசையாக வந்துள்ளீர்களோ, அதைவிட ஆசையுடன், அன்புடன் உங்களைப் பார்க்க வந்துள்ளேன். நீங்கள் என்னைப் பார்க்க மட்டும் வரவில்லை. இவர் என்ன பேசுகிறார் என்பதைக் கேட்கவும் வந்திருக்கிறீர்கள். இது பார்க்க வந்துவிட்டு கலைகிற கூட்டம் கிடையாது. என்ன கொள்கையைப் பேசுகிறோம், என்ன அரசியல் பேசுகிறோம் என்பதைக் கூர்ந்து கவனிக்கும் கூட்டம் தி.மு.க உடன்பிறப்புகளின் கூட்டம்.

இவ்வளவு சிறப்பான நிகழ்ச்சியை குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர் என் அன்பு சகோதரர் ஐ.பி.செந்தில்குமார் அவர்களுக்கு எனது பாராட்டுகள், வாழ்த்துகள். இந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்தமைக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். பேசிவிட்டு மட்டும் செல்லவில்லை. உங்கள் அத்தனை பேருடனும் தனித்தனியாகப் புகைப்படமும் எடுத்துக் கொள்ள போகிறேன்.

### நெருக்கடிகள், துரோகங்கள்

இன்று நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வயது 76. பவளவிழா கண்டுள்ள இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். இந்த 76 வருடங்களில் எத்தனையோ பெரிய இயக்கங்களை எதிர்த்து வென்றுள்ளோம். பெரிய தலைவர்களை எல்லாம் எதிர்த்து, அரசியல் செய்து நாம் வெற்றிப் பெற்றுள்ளோம். எத்தனையோ நெருக்கடிகள், துரோகங்களைப் பார்த்து இருக்கிறோம். நெருப்பாற்றை கடந்து இருக்கிறோம். இத்தனை துரோகங்கள், சவால்களைச் சந்தித்த பிறகும் இன்றைக்கும் நம் திராவிட முன்னேற்றக் கழகம், அதே இளமையோடும், துடிப்போடும் வலிமையோடும் இருக்கிறது என்றால் அதற்கு இங்கு வந்துள்ள கலைஞரின் உடன்பிறப்புகள் நீங்கள்தான் காரணம்.



கழகத்தைத் தாங்கி பிடிக்கின்ற அடித்தளம் நீங்கள்தான். இன்று நாம் பெருமையாகச் சொல்கிறோம் கழகம் ஆறு முறை ஆட்சி அமைத்துள்ளது என்று. அந்த பெருமைக்குக் காரணம் இங்கு வந்துள்ள கழகத்தின் உடன்பிறப்புகள்தான். கலைஞர் அவர்கள் 5 முறை முதலமைச்சராக இருந்தார் என்று பெருமையாகச் சொல்கிறோம், நம் தலைவர் இன்றைக்கு முதலமைச்சராக அமர்ந்திருக்கிறார் என்று பெருமையாகச் சொல்கிறோம் என்றால், அதற்குக் காரணம் இங்கு வந்துள்ள நீங்கள்தான். இதில் ஒரு சின்ன குறை. சென்ற முறை திண்டுக்கல் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். இந்த முறை நிச்சயம் அந்த தவறை நீங்கள் செய்யமாட்டீர்கள். திண்டுக்கல் தொகுதியையும் வெற்றிபெற்று காட்டுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உங்களின் உணர்வுகளை, எழுச்சியைப் பார்க்கும்போது இந்த முறை நிச்சயம் 7 தொகுதியிலும் வெற்றிப்பெறப் போவது உறுதியாகிவிட்டது என்பதை நான் நம்புகிறேன். சென்ற முறை நம் தலைவர் அவர்கள் முதலமைச்சராக அமர்ந்தபிறகு, இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கிற அளவுக்கு சிறப்பான ஆட்சியை நம் தலைவர் அவர்கள் வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் பல திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

### ஐந்து கையெழுத்துகள்

ஆட்சிக்கு வந்தவுடன் நம் தலைவர் அவர்கள் முதல் நாள் ஐந்து கையெழுத்துகளை போட்டார் நம் தலைவர் அவர்கள். அதில் முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணத்திற்கான கையெழுத்துதான். அந்தத் திட்டத்தில் இந்த நான்கரை வருடத்தில் 800 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். அதுதான் அந்தத் திட்டத்தின் வெற்றி. இந்த திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 22 கோடிக்கும் அதிகமான பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

கல்லூரி படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தை அறிவித்தார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் அந்த மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இந்தத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாடு முழுவதும் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று இருக்கிறார்கள். இந்த திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 20 ஆயிரம் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

### காலை உணவுத் திட்டம்

மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வரவேண்டும். வந்து பசியோடு படிக்கக்கூடாது என்பதற்காக நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். நாம் ஆட்சி அமைத்து, கிட்டத்தட்ட 6 மாதம் காலம் நாம் கொரோனா பெருந்தொற்றுடன் போராடிக்கொண்டு இருந்தோம். நாம் ஆட்சிக்கு வரும்போது கடும் நிதி நெருக்கடி இருந்தது. எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தத் திட்டத்தை செயல்படுத்தவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், நம் தலைவர் அவர்கள் இரண்டு வருடங்களுக்கு முன்பு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் அந்த திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிட்டத்தட்ட ஒரு கோடியே இருபது லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் நம் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். 25 மாதங்கள் இந்த ஆயிரம் ரூபாயை நம் தலைவர் அவர்கள் வழங்கியுள்ளார். இந்த திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 4 லட்சம் மகளிர் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்.

### திண்டுக்கல் தொகுதி

இந்த திண்டுக்கல் தொகுதிக்கு மட்டும் பல்வேறு திட்டங்களை நம் அரசு செய்திருக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை வசதிகள், பள்ளிக்கூட கட்டட உட்கட்டமைப்புகள், பாலகிருஷ்ணாபுரத்தில் புதிய மேம்பாலம் என்று பல கட்டமைப்புப் பணிகளை நம் அரசு செய்து கொடுத்திருக்கிறது.

திண்டுக்கல் மாநகராட்சி பகுதிகளில் 262 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை பணிகள், குடிநீர் வசதிகள், புதிதாக தெருவிளக்குகள், மழைநீர் வடிகால் வசதி, பாதாள சாக்கடைத் திட்டம் என்று பல திட்டங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 250 கோடி ரூபாய் செலவில் சுற்றுவட்ட சாலை அமைக்கும் பணிகள் நடந்துகொண்டுள்ளன. திண்டுக்கல்லுக்கு நம் சட்டமன்ற உறுப்பினர் இல்லாமலே இவ்வளவு பணிகள் நடந்திருக்கிறது என்றால், நாளை நம் சட்டமன்ற உறுப்பினர் இருந்தால் இன்னும் அதிகமான பணிகள் நம் திண்டுக்கல் தொகுதிக்கு தலைவர் அவர்கள் நிச்சயம் கொடுப்பார்கள்.

இதுபோன்றமுற்போக்குதிட்டங்களால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே பொருளாதார வளர்ச்சியில் முதல் மாநிலமாக, 11.19 சதவிகித வளர்ச்சியுடன் நம் தமிழ்நாடு வளர்ச்சியடைந்து வருகிறது. இந்த வளர்ச்சிகளை எல்லாம் பொறுக்க முடியாமல்தான் சங்கிகள் கூட்டம் நமக்கு எல்லா வகையான தடங்கல்களையும் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

### பாசிச பா.ஜ.க அரசு

நிதி உரிமை, கல்வி உரிமை, மொழி உரிமை, மாநில உரிமையைப் பறிக்கின்ற வேலைகளில் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு தொடர்ந்து செய்துகொண்டு இருக்கிறார்கள். இவை அனைத்தையும் எதிர்த்து, குரல்கொடுக்கின்ற இந்தியாவிலேயே முதல் தலைவராக நம் முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். ஒன்றிய அரசு புதியக்கல்விக் கொள்கையை கொண்டுவந்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னது. புதியக் கல்விக் கொள்கையின் மூலமாக இந்தியையும், சமஸ்கிருதத்தையும் குறுக்கு வழியில், தமிழ்நாட்டுக்குள் நுழைக்கப் பார்த்தார்கள். குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவரப் பார்த்தார்கள்.

நீங்கள் புதிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழநாட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு வரவேண்டிய 2,500 கோடி ரூபாயைத் தருவேன் என்று ஒன்றிய அமைச்சர் நேரடியாகச் சொன்னார். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் நீங்கள் 2,500 கோடி இல்லை, 10,000 ஆயிரம் கோடி கொடுத்தாலும் தமிழ்நாட்டுக்குள் என்றைக்கும் புதியக் கல்விக் கொள்கையை அனுமதிக்க மாட்டேன் என்று சொன்னார்.

### கடுமையான போட்டிதான்

நம் கழகத்தில் 25 அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி, மாணவர் அணி, வழக்கறிஞர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி என்று 25 அணிகள் இருக்கின்றன. ஆனால், அதைவிட அதிகமான அணிகள் அ.தி.மு.க.வில் இருக்கின்றன. ஈ.பி.எஸ். அணி, ஓ.பி.எஸ். அணி, டி.டி.வி அணி, சசிகலா அணி, தீபா அணி, தீபா டிரைவர் அணி, செங்கோட்டையன் அணி என்று பல அணிகள் இருக்கின்றன. இங்கு திண்டுக்கல்லில், திண்டுக்கல் சீனிவாசன் அணி இருக்கிறது.

இன்றைக்கு அ.தி.மு.க.வில் இருக்கின்ற முன்னாள் அமைச்சர்கள் பல பக்கம் போட்டிப்போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் முக்கியமான போட்டி என்னவென்றால், அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்களுக்கும், அண்ணன் செல்லூர் ராஜீவுக்கும்தான். யார் உண்மையான தலைசிறந்த விஞ்ஞானி, யார் உண்மையான சிந்தனை சிற்பி, நீயா? நானா? யார் மிகப்பெரிய அறிவாளி என்ற மிகப்பெரிய போட்டியில் கடுமையான போட்டிதான்.

திண்டுக்கல் சீனிவாசன் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மீது ஏன் இவ்வளவு கோபம் என்று தெரியவில்லை. இதுவரைக்கும் குறைந்தது மூன்று முறையாவது மீண்டும் நம் தலைவரை முதலமைச்சர் ஆக்குவோம் என்று வெளிப்படையாகப் பேசிய ஒரே முன்னாள் அமைச்சர் அவர்தான்.

நம் தி.மு.கவின் தலைமை அலுவலகம் சென்னை அறிவாலயத்தில் இருக்கிறது. ஏதாவது ஒரு பிரச்சினை என்றால் அறிவாலயத்திற்குச் சென்று நம் கழக நிர்வாகிகளைப் பார்ப்பீர்கள். அ.தி.மு.கவின் தலைமை அலுவலகம், சென்னை இராயப்பேட்டையில் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், அ.தி.மு.கவின் தலைமை அலுவலகம் டெல்லியில் உள்ள அமித் ஷா வீட்டில் இருக்கிறது.

நம் கழக அணி குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றிப்பெறும் என்று சொல்லி இருக்கிறார்கள். நாம் அத்தனைபேரும் அடுத்த ஐந்து மாதம் காலம் ஒன்றாகச் செயல்பட்டோம் என்றால், 200 இல்லை 200க்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழக அணி வெற்றிபெறும்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, சக்கரபாணி, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், தொகுதி பார்வையாளர் வழக்கறிஞர் செல்வக்குமார், மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் ஆனந்தகுமார், மாநில வர்த்தகர் அணியின் இணைச் செயலாளர் ஜெயன், மாவட்டக் கழக நிர்வாகிகள் காமாட்சி, நாகராஜன், பிலால் உசேன், மார்க்கரேட் மேரி, சத்தியமூர்த்தி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் கலைராஜா, கே.எஸ்.அக்பர், மாநகரக் கழக நிர்வாகிகள் முகமது இப்ராஹிம், வைகைமுத்து, முகமது சித்திக், அழகர்சாமி, சரவணன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஏ.டி.சந்தோஷ்முத்து, ஜானகிராமன், ராஜேந்திரகுமார், சந்திரசேகர், சூசை இராபர்ட், பஜுலுல் ஹக், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கணேசன், ஹரிஹரசுதன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பிரபாகர், முருகானந்தம், வி.சி.ஏ.இராஜேந்திரன், எஸ்.எம்.அமிர்தகணேஷ், இல.கண்ணன், சுரேஷ்குமார், ஆர்.எம்.ராஜசேகர், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அப்துல் ரகுமான், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் ராஜேஷ் பெருமாள், மணிகண்டன், காதர் மொகிதீன், ராஜ்குமார், ரவிசங்கர், மாநகரத் துணை அமைப்பாளர்கள் செபாஸ்டின், நாகேந்திரன், வெங்கடேஷ், பாபு மீரான் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.

## கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில்கள்!

`நிகழ்ச்சியின் நிறைவுப் பகுதியாக கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பதில்களின் விவரம் வருமாறு:

**கேள்வி – பதில்கள்**

**அலெக்ஸ், திண்டுக்கல் தெற்கு ஒன்றியம்.**

**கேள்வி:** மாவட்டம் வாரியாக, குறைந்தபட்சம் ஒரு இளைஞர் மற்றும் மகளிருக்கு எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை வழங்குவீர்களா?

**துணை முதலமைச்சர் :** நிச்சயம் இளைஞர்களுக்கும், மகளிருக்கும் நிறைய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உங்களின் கோரிக்கையை நிச்சயம் தலைவரிடத்தில் சொல்வேன். தலைவர் அவர் களுக்கு தெரியும். எந்தத் தொகுதியில் யாரை நிற்க வைக்க வேண்டும் என்று. தலைவர் யாரை வேட்பா ளராக நிறுத்தினாலும், கலைஞர் தான் உங்கள் தொகுதியின் வேட்பாளர் என்ற மன உறுதியோடு தேர்தல் வேலைகளில் நாம் ஈடுபட வேண்டும்.

**அருள் ஆனந்த், திண்டுக்கல் ஒன்றியம்.**

**கேள்வி:** கட்டணமில்லாப் பேருந்து சேவையை மூத்த குடிமக்களுக்கு விரிவுப்படுத்த வேண்டும்?

**துணை முதலமைச்சர்:** இது ஒரு நல்ல கோரிக்கை. ஏற்கனவே அரசு சார்பாக சென்னையில் மட்டும் மூத்த குடிமக்களுக்கு மாதத்திற்கு 10 முறை பயணம் செய்யலாம் என்று அரசு அறிவித்துள்ளது. வருங்காலத்தில் அனைத்து மூத்த குடிமக்களுக்கும் இந்த இலவசப் பேருந்து பயண திட்டத்தை, நிச்சயம் நம் தலைவர் அவர்கள் விரிவுப்படுத்துவார் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**முருகேசன், திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம்.**

**கேள்வி:** திண்டுக்கல் தொகுதியில் இந்த முறை தி.மு.க வேட்பாளர்தான் போட்டியிட வேண்டும்?

**துணை** முதலமைச்சர் : உங்களின் கோரிக்கை தான், என்னுடைய கோரிக்கையும். ஆனால், இதற்கான முடிவை நம் தலைவர் அவர்கள் அறிவிப்பார். தலைவர் அவர்கள் யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் அந்த வெற்றியை உறுதி செய்துவிட்டு, நிச்சயம் தேர்தலுக்குப் பின்பு முதல் வெற்றி விழாவை இந்த திண்டுக்கல்லுக்கு வந்து உங்களுடன் சேர்ந்து நான் பங்குபெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**காளிமுத்து, திண்டுக்கல் கிழக்கு ஒன்றியம்.**

**கேள்வி:** தமிழ்நாடு அரசின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்படுமா?

**துணை முதலமைச்சர் :** தற்போது குடும்பத்துக்கு 5 லட்சம் ரூபாய் வழங்கிகொண்டு இருக்கிறார்கள். எப்படி கல்வித்துறைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ? அதேபோல் மருத்துவத்துறைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48, மக்களைத்தேடி மருத்துவம் போன்ற திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். நலம் காக்கும் ஸ்டாலின் என்ற முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. உங்களின் கோரிக்கையை நிறைவேற்ற ஆலோசனை செய்து, அந்தக் காப்பீட்டு தொகையை உயர்த்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**மா.பாலகுரு, திண்டுக்கல் வடக்கு மாவட்டம்.**

**கேள்வி:** ஆர்.எஸ்.எஸ். என்ற கொடிய நோய், தமிழ்நாட்டுக்குள் வராமல் தடுப்பது எப்படி?

**துணை முதலமைச்சர் :** இந்தியாவிலேயே ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாசிய பா.ஜ.க.வை முதன்மையாக எதிர்க்கக்கூடியவர் நம் கழகத் தலைவர் அவர்கள்தான். இது ஒட்டுமொத்த இந்தியாவில் இருக்கின்ற அனைத்து தலைவர்களுக்கும் தெரியும். பாசிச பா.ஜ.க. தொடர்ந்து நமக்குப் பல்வேறு இடையூறுகளை செய்து வருகிறது. கலைஞர் வழியில் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.கவை கடுமையாக நம் தலைவர் அவர்கள் எதிர்த்து வருகிறார். நிச்சயம் எதிர்ப்பார். என்றைக்கும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டார் நம் தலைவர் அவர்கள்.

நம் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், அடுத்த 5 மாத காலம் உங்களின் உழைப்பு மிகமிக முக்கியம். அந்த உழைப்பை நீங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் அருமை சகோதரர் ஐ.பி.செந்தில்குமார் பேசும்போது சொன்னார். இவர் மிகவும் கைராசிக்காரர். இவர் அரசியலுக்கு வந்ததிலிருந்து அனைத்து தேர்தல்களிலும் வெற்றிபெற்றுவிட்டோம். அவருக்கு ராசியில் நம்பிக்கை இருக்கலாம். எனக்கு நம்பிக்கை கிடையாது. எனது நம்பிக்கை இங்கு உட்கார்ந்துள்ள கழகத்தின் உடன்பிறப்புகள் உங்கள்மீதுதான். நான் உங்களை மட்டும்தான் நம்புவேன்.

பல பேருக்கு தெரியாது. நானும் அவரும் ஒன்றாகப் படித்தோம். அவர் படித்தார். நான் கூட சென்றேன். வயதில் நான் அவருக்கு சீனியர். ஆனால், பொதுவாழ்க்கையில் அவர் எனக்கு சீனியர். அந்த உரிமையோடு அவரின் எண்ணங்களை இங்கு சொல்லியிருக்கிறார்.

நம் நம்பிக்கை எல்லாம் தலைவரின் உழைப்பு, தலைவரின் சாதனை, அரசின் திட்டங்கள், தமிழ்நாட்டு மக்கள் நம் தலைவரின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை இந்த நான்கும் மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தை மீண்டும் ஆட்சியில் அமர வைக்கும். நம் கழகத் தலைவர் அவர்களை மீண்டும் முதலமைச்சர் ஆக்குவோம்.

எனவே 200 க்கும் அதிகமான தொகுதிகளில் நாம் வெற்றிபெற்று காட்டுவோம். அதற்கு தொடக்கப்புள்ளியாக இந்த திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கின்ற 7 தொகுதியிலும் வெற்றிபெற்று காட்டுவோம். அதற்கு இந்த இந்த திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதி தொடக்கப்புள்ளியாக இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த குறுகிய காலத்தில் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த செந்தில்குமார் அவர்களுக்கும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், அண்ணன் சக்கரபாணி அவர்களுக்கும், வந்திருக்கின்ற அனைத்து கழக நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணித் துணைச் செயலாளர் ஆனந்தகுமார் அவர்களுக்கும், உடன்பிறப்பு கள் உங்கள் அத்தனைபேருக்கும் மீண்டும் எனது நன்றியைச் சொல்லி, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.